Golden Point Award 2023
Tamil Poetry – Second Prize
*முகில் சூழும் பாலங்கள்* by C. Mohanapriya சந்திரசேகரன் மோகனப்ரியா

**1. முகில் சூழும் பாலங்கள்**

அந்தரத்தில் மிதக்கும் பாலங்கள்

சாலைகளை மட்டுமல்ல

இதுவரையிலும் காணாத

வீடுகளையும் இணைக்கின்றன.

நீண்டு வளைந்து அவை

தன் கழுத்தைத் திருப்புகையில்

வீடுகள் வானத்தில்

புரள்கின்றன.

தூரத்தில் தெரியும்

பால வளைவிற்கு அப்பால்

நம் கற்பனைகளில்

விரிகிறது

ஒரு புதிய நகரம்.

அதில் துலங்கும்

புத்தம் புதிய வீடு.

இதோ

பயணித்துக்கொண்டிருக்கும்

இந்த பாலத்திற்குக் கீழே

நடனமிடும் ஆறுகளின் நீர்த்தாரைகள்.

கழிமுகம் தொடும் அலைகளிடம்

கொஞ்சி நிற்கும்

Golden Point Award 2023
Tamil Poetry – Second Prize
*முகில் சூழும் பாலங்கள்* by C. Mohanapriya சந்திரசேகரன் மோகனப்ரியா

ஜெல்லி மீன்களின்

உச்சந்தலையில் அமர்ந்து

பொன்னிற கதிர்களைப் பூசிக்

கண் விழிக்கிறது

பாலங்களின் நகரம்.